சமூக விடுதலையை முன்னேடுப்போம் !   பெண் விடுதலையைச் சாதிப்போம் !

# பெருகிவரும் பாலியல் வன்கொடுமைக்கு காரணம்

# நுகர்வுவெறியே !

*அன்பார்ந்த உழைக்கும் பெண்களே !*

“வீட்டில் தனியாக இருந்த பெண்ணைக் கொன்று, நகைகள் கொள்ளை – கொள்ளையடித்தப் பணத்தில் அடுக்குமாடி வீடு, ஆடம்பரத் திருமணம், சொகுசான வாழ்க்கை – சப்–இன்ஸ்பெக்டர் கழுத்தறுத்து கொலை – கள்ளக்காதலி கைது, எனக்கு கிடைக்காத நித்யா யாருக்கும் கிடைக்கக் கூடாது – கொலை செய்த காதலன் வாக்குமூலம், பள்ளி சிறுமி பாலியல் வன்கொடுமை, கொடூரமாக கொலை” என்ற செய்திகளை படிக்கும் போதே அருவறுப்பாக இருக்கிறது ?

**ஏன் இந்த வக்கிரம் ?**

ஏற்கனவே இதெல்லாம் நடப்பதுதானே. இதில் என்ன இருக்கிறது என்று கேட்கிறீர்களா ? முன்பு நடந்தது வேறு. இப்பொழுது நடப்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல. முன்பெல்லாம் பசி, வறுமையின் காரணமாக திருடினான். கிராமமாக இருந்தால் நெல்லையும், கம்பையும், ஆட்டையும் மாட்டையும் திருடினான். நகரமாக இருந்தால் அண்டாவும் குண்டாவும் திருடினான். ஆனால் இன்று அப்படியா? இல்லை, உல்லாசமாக இருப்பதற்காக அல்லவா திருடுகிறான்.

ஆடம்பரமாக, உல்லாசமாக வாழ பணம் தேவை. அதை உழைத்து சம்பாதிக்க முடியாது. அதற்கு வாய்ப்பும் இல்லை. அப்படி என்றால் என்ன செய்வது? கொள்ளையடிப்பதை தவிர வேறு வழியில்லை. தேவைப்பட்டால் கொலையும் செய்யலாம். அதுவும் வக்கிரமான கொலை. கழுத்தை அறுத்துக் கொலை, பெற்றெடுத்த, பாலூட்டி சீராட்டி வளர்த்த தாயைக் கொல்வது, பாசமிகு தந்தையைக் கொல்வது, தன்னை நேசித்த காதலியை பாலியல் கொடுமை செய்து கொல்வது – இப்பொழுது சொல்லுங்கள். பசிக்காக – வறுமைக்காகவா கொல்கிறார்கள்? இல்லை. ஆன்டிராய்ட் போன், விதவிதமான ஆடைகள், வகைவகையான உணவுகள், குடிக்க சாராயம், அனுபவிக்க பெண்கள் என விதவிதமாக ருசிக்கவே செய்கிறார்கள்.

**அப்படி என்றால் இதற்கெல்லாம் யார் காரணம்?**

வேறு யாருமில்லை. உழைப்பவனுக்கு அடிமாட்டு கூலியைக் கொடுத்துவிட்டு கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கும் சுயநலத்தையே கொள்கையாகப் பரப்பும் கார்ப்பரேட் முதலாளிகளும், பன்னாட்டுக் கம்பெனிகளும், தனியார் மயம் – தாராயமயம் – உலகமயம் என்ற பெயரில் கொண்டு வந்த நுகர்வுவெறிதான் காரணம். அதாவது மறுகாலனியாக்கக் கொள்கைதான் காரணம்.

படித்தப் படிப்புக்கு வேலை இல்லை, வேலைக்குக்கேற்ற கூலியில்லை, ஆனால் இவர்கள் பரப்பும் நுகர்வுவெறியானது, எப்படியாவது இதையெல்லாம் அனுபவிச்சி தீர்த்திடனுங்கிற பேராசை. இதுவே, நுகர்வுவெறியில் மாணவர் – இளைஞர்களை தள்ளிவிடுகிறது. இந்த நுகர்வுவெறியை, இதை அடைவதற்கான வக்கிரப் புத்தியை நமது சிந்தனையில் திணிக்கும் வேலையை சினிமா – சீரியல் – விளம்பரங்களும், இவர்கள் நடத்தும் ஆபாசக் கூத்துக்களும் இதை செவ்வனே செய்கின்றன. இதன்மூலம் உழைத்தப் பணத்தை வைத்துக் கொண்டு நேர்மையாக வாழ்பவர்களைப் பிழைக்கத் தெரியாத கோமாளிகள் என்றும், அவர்களின் உயர்ந்த ஒழுக்கத்தையும் இழிவுப்படுத்துகின்றன. ஆனால், உழைக்காமல் அடுத்தவன் உழைப்பை உறிஞ்சி கொழுத்த, வரியை – வங்கிக் கடனை ஏப்பம் விட்ட, திருடிய அம்பானி – டாடா போன்ற கொள்ளையர்களைப் பாராட்டுகிறது.

எந்த சீரியலாவது ஒழுக்கமான குடும்பத்தைக் காட்டுகிறதா? எந்த விளம்பரமாவது நல்லதை சொல்கிறதா? எந்த வீடியோ கேமாவது பிள்ளைகளை நல்வழிப்படுத்துகிறதா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பணம் இருந்தா ஆயிரம் பொண்டாட்டி கிடைப்பா? எவ்வளவு நாள்தான் நானும் நல்லவனாகவே நடிக்கிறது என வசனம் பேசும் அஜீத்தும், வெட்டியாக பொழுதைப் போக்கி கெத்து காட்டுவது, திருடுவது, அடுத்தவனை ஏமாற்றுவது போன்றவைகளையே கதைகளாக்கி நடித்து வரும் கார்த்தி, விமல், சிவா, சிவகார்த்திகேயன் போன்ற கழிச்சடைகளும் நம் பிள்ளைகளைச் சீரழிக்கவில்லையா?

மலிவு விலை செல்போன்கள், மெமரி கார்டுகள், இன்டர்நெட்கள் வீடு தேடி வந்து நம் பிள்ளைகளின் மனதில் பாலியல் வக்கிரங்களைத் திணித்து சீரழிப்பது – படிப்பு சொல்லிதர வேண்டிய அரசே குடிக்க சொல்லித் தந்து ஊற்றிக் கொடுப்பது – நுகர்வுவெறியால் கொலை, கொள்ளை, பாலியல் கொடுமைகள் பெருகிவருவதை சகித்துக் கொள்ள முடியுமா? ஆனால், இதை சகஜமாக கருதும் அளவிற்கு நம்முடைய சிந்தனையை – உணர்வை மழுங்கடித்து சொரணையற்றவர்களாக மாற்றி வருகிறார்கள். யார் தெரியுமா? சினிமா, சீரியல், விளம்பரங்களை நடத்தும் நிறுவனங்கள், அவைகளுக்கு பணத்தை வாரி இரைக்கும் கார்ப்பரேட் கம்பெனிகள், இவைகளுக்கு அடியாள் வேலை செய்யும் அதிகாரிகளும், போலீசும், ஓட்டுப்பொறுக்கிக் கட்சிகளும்தான்.

**இதற்கு விடிவே இல்லையா? ஏன் இல்லை?**

“எரிகிறத பிடிங்கினா கொதிக்கிறது அடங்கும்” என்று மக்கள் கூறுவதுபோல, பிரச்சினைக்கு ஆணிவேரான நுகர்வுவெறியைப் பரப்பும் கார்ப்பரேட் சீரழிவுக் கலாச்சாரத்தையும், அரசே சாராயம் விற்கும் அக்கிரமத்தையும் ஒழிக்க வேண்டும். இவற்றை தனியார்மயம் – தாராளமயம் – உலகமயம் என்ற பெயரில் அதாவது மறுகாலனியாக்கக் கொள்கை மூலம் திணித்து, இதற்கு அடியாள் வேலை செய்யும் மக்கள் விரோத அரசை குப்பைத் தொட்டியில் தூக்கி எறிய வேண்டும். இதற்கு மாற்றாக நாமும் ஒரு மாற்று அதிகாரத்திற்கான கமிட்டியைக் கட்ட வேண்டும். “இதெல்லாம் நடக்கிற காரியமா? ஆகிற விசயமாக சொல்லுங்கள்” என்று ஒதுங்கி நின்றால் எதுவும் நடக்கப் போவதில்லை. உங்கள் வீடு கொள்ளை போகலாம். ஏதோ ஒரு பொறுக்கியால் உங்கள் பிள்ளைகள் பாலியல் கொடுமைக்கு ஆளாகலாம். கொலை செய்யப்படலாம். இக்கொடுமைகளை விடவா, இதை மாற்றுவதற்கான போராட்டத்தை நடத்துவது கடினம்? நமது வாழ்க்கைக்காக நாம் போராடாமல் வேறு யார் போராடுவார்கள்? உங்களோடு கைக்கோர்த்து போராட நாங்கள் தயாராக இருக்கிறோம். வாருங்கள் போராடுவோம், சாதித்துக் காட்டுவோம்.

# ஆர்ப்பாட்டம்

9.8.2014

மாலை 4.00

பல்லாவரம் பேருந்து நிலையம் அருகில்

## பெண்கள் விடுதலை முன்னணி

தொடர்புக்கு : 98416 58457

சென்னை

புதிய ஜனநாயகம் படியுங்கள் புதிய கலாச்சாரம்